**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII, Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 256 of 2025

Depositions of PW -4 witness for ________ Prosecution / Defence / Court

Name : முருகேஷ்

Father's Name : சென்னியப்பன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of February** 2026.

**(1-3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் கோவை, காடுவெட்டி பாளையத்தில் குடியிருந்து கொண்டு கடை வைத்துள்ளேன். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 30.05.2020 ஆம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் நான் கடையில் இருந்த பொழுது கருமத்தம்பட்டி காவல் ஆய்வாளர் பிரச்சனை சம்பந்தமாக நடு தோட்டத்திற்கு விசாரணைக்காக வந்தார். இரண்டு நாட்கள் முன்பாக பிரச்சனை சம்பந்தமாக நான் சம்பவ தினத்தன்று சம்பவ இடத்தை சென்று பார்த்து வந்தேன். நான் அன்றைய தினம் பாக்கியலட்சுமியிடம் எதுவும் பிரச்சனை செய்ய வேண்டாம் என அறிவுரை கூறி வந்து விட்டேன். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் கார்த்திகேயன் என்பவரும் கையொப்பம் செய்தோம். பார்வை மகசர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது போலீசார் என விசாரித்தார்கள்.

**<u>ஒன்று முதல் மூன்று எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. போலீசார் அழைத்து தான் நாம் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான். நான் போலீசார் என்னை அழைத்த பொழுது நான் எங்கே இருந்தேன் என்றால் என்னுடைய கடையிலிருந்தேன். நான் சம்பவ இடம் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் மதியவாக்கில் சென்றேன். நேரம் சரியாக ஞாபகம் இல்லை. சம்பவ இடத்திற்கு என்னுடன் யார் வந்தார்கள் என்றால் கார்த்திகேயன் வந்தார். நான் போலீசார் விசாரணையில் நண்பர் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் சென்று பார்த்து வருவதாக தெரிவித்துள்ளீர்கள் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் உடல்நிலை சரியில்லாமல் இருந்த நண்பரை பார்த்து வருவதாக சொல்லி உள்ளேன் உடல்நிலை சரியில்லாமல் இருந்த நம்பரை பார்த்து வருவதாக சொல்லி உள்ளேன். தற்பொழுது போலீசார் என்னை அழைத்தபோது கடையில் இருந்தேன் என முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கருப்பசாமி எனது உறவினர் என்றால் சரிதான்.

2. கருப்பசாமி என்னுடைய உறவினர் என்பதாலும் அவர் எனக்கு உதவிகள் செய்து வருவதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து தற்பொழுது சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தன்று கருப்பசாமி தோட்டத்தில் இருந்தார் என்றால் சரியல்ல, அவர் எனக்கு போன் செய்து சொன்னதால் தான் நான் சம்பவ இடம் சென்றேன். கருப்பசாமி சம்பவ தினத்தன்று வீட்டில் இருந்தார் என்றும் அவர் இல்லை என நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கருப்பசாமி சம்பவ இடத்தில் இருந்தார் என்றும் அன்றைய தினம் போலீசார் சம்பவ இடம் வந்த பதிவுகள் அனைத்தும் ரங்கசாமி பொருத்தியுள்ள கேமராவில் பதிவாகியுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.06 15:03:29 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**